## ஆசிரியர் தேர்வு வாரியம், சென்னை–600 006

### பத்திரிக்கைச் செய்தி

2018–2019ம் ஆண்டிற்கு கணினி பயிற்றுநர் நிலை – 1 (முதுகலை நிலை)–க்கான கணினி வழித் தேர்வு 23.06.2019 (ஞாயிற்றுக்கிழமை) அன்று காலை 10.00 மணி முதல் 01.00 மணி வரை நடைபெற உள்ளது. இத்தேர்விற்கு உரிய அனுமதி சீட்டு (Admit Card) ஆசிரியர் தேர்வு வாரிய இணையதள முகவரி www.trb.tn.nic.in –ல் தேர்வர்கள் தங்களது User ID மற்றும் கடவுச் சொல் (Password) உள்ளீடு செய்து பதிவிறக்கம் செய்யும் வகையில் தற்பொழுது ஆசிரியர் தேர்வு வாரிய இணையதளத்தில் வெளியிடப்பட்டுள்ளது. தேர்வர்கள் நுழைவுச் சீட்டினை Printout எடுத்து தேர்வு மையத்திற்கு நுழைவுச்சீட்டில் தெரிவிக்கப்பட்டுள்ள நேரம் (Reporting Time) மற்றும் அதில் தெரிவிக்கப்பட்டுள்ளவாறு ஏதேனும் ஒரு அசல் அடையாள அட்டையுடனும் (Original Identity Card) விண்ணப்பிக்கும்போது பதிவேற்றம் செய்த புகைப்படத்தின் அசல் பிரதியையும் (Original passport size Photograph) தவறாமல் எடுத்து வர வேண்டும். தேர்வு நாளன்று காலை 08.30 மணிக்குள்ளாக தேர்வு மையத்திற்கு கண்டிப்பாக வருகைபுரிய வேண்டும் என்ற விவரம் தெரிவிக்கலாகிறது.

நாள் 17.06.2019

தலைவர்